(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO.386/2021
**Depostitions of PW- 1 Witness for**

| | |
|---|---|
| Name | செல்வராஜ் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of April 2024.

Signature of Witness.

03.04.2024

6 ம் எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. மற்ற எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை–**

நான் திருவில்லிபுத்தூர் ரைட்டன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். 4 வருடத்திற்கு முன்பு மே மாதம் 26 ம் தேதி எனது மகளுக்கு தலைக்கு தண்ணீர் ஊற்றும் பங்சன் வைத்திருந்தேன். அதற்காக அதற்கு இரண்டு நாட்கள் முன்பு 24 ம் தேதி எனது உடன்பிறந்த தங்கை புஷ்பராணிக்கு சொல்வதற்காக அவர் வீட்டிற்கு போயிருந்தேன். எனது தங்கை வீட்டில் இல்லை. காளியம்மன் கோவில் முன்பு ரோட்டில் எனது தங்கை புஷ்பராணியின் மகன் வனராஜை எனது மச்சான் சேவியரும், எனது தங்கையும் சத்தம்போட்டுக்கொண்டு

இருந்தார்கள். அப்போது நான் அவர்களிடம் எதற்கு புஷ்பா படிக்கிற பையனை ரோட்டில் வைத்து வைது கொண்டு இருக்கிறாய் என்று கேட்டேன். அதற்கு அவள் சேராதவர்களுடன் சேர்ந்து அவரது மகன் தண்ணீர் அடித்து கெட்டுபோய்விட்டான் என்று சொன்னாள். அப்போது நான் எனது தங்கை மகனை கூப்பிட்டு சத்தம்போட்டேன். நீ படிக்கிற பையன் எதற்காக கண்டவர்களுடன் சேர்ந்து சுத்துகிறாய் என்று சத்தம் போட்டேன். அப்போது புதுவை என்ற பையன் என்னிடம் வந்து நீ என்னைதானடா சொல்கிறாய் என்று சொல்லி என்னை கன்னத்தில் அறைந்துவிட்டான். ஆஜர் 1ம் எதிரி தான் மேற்படி புதுவை என்பவர் ஆவார். அப்போது நான் உன்னை சொல்லவில்லை, எனது தங்கையின் மகனைத்தான் நான் சத்தம்போடுகிறேன் என்று சொன்னேன். அப்போது எதிரி அசோக் கம்பியால் எனது இடது கண்ணுக்கு மேலே நெற்றியில் அடித்து கீழே தள்ளிவிட்டார். சாட்சி தனது இடது கண்ணிற்கு மேலே உள்ள நீண்ட வடிவ தழும்பை காட்டி சொல்கிறார். பின்பு எதிரிகள் அனைவரும் சேர்ந்து என்னை அடித்து கீழே தள்ளிவிட்டதில் எனக்கு மயக்கமாக வந்துவிட்டது. அப்போது அ க்கம்பக்கத்தில் இருந்து எனது மனைவியும், மற்ற நபர்களும் வந்து விலக்கிவிட்டார்கள். அப்போது எதிரிகள் நீ இன்றைக்கு தப்பித்துவிட்டாய் என்றைக்கு இருந்தாலும் உன் சாவு எங்கள் கையில் தான் என்று சொல்லி மிரட்டினார்கள். நான் 09.00 மணிக்கு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். அப்போது போலீசார் என்னை அங்கு வந்து விசாரித்தார்கள். நான் வீட்டில் கலந்து பேசிவிட்டு சொல்கிறேன் என்று சொன்னேன். பின்பு 26ம் தேதி காலை 10.30 மணியளவில் போலீசார் மீண்டும் மருத்துவமனைக்கு வந்தார்கள். எனக்கு எழுதத்தெரியாதென்பதால் பக்கத்து பெட்டில் இருந்த நபரிடம் நான் சொல்லி புகார் மனு எழுதினேன். புகாரை போலீசாரிடம் கொடுத்தேன். எனக்கு அதிகமாக வலி இருந்ததால் 28ம் தேதி என்னை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். நான் மதியம் 02.00 மணிக்கு அங்கு போனேன். ஒரு வாரம் அங்கு சிகிச்சையில்இருந்தேன். பின்பு வீட்டிற்கு

வந்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**–

சம்பவஇடமான ரைட்டன் பட்டிரோடு தென்வடல் ரோடு என்றால் சரிதான். காளியம்மன் கோவிலுக்கு தெற்கே ரோட்டின் மேற்கு பக்கம் மகளிர் விடுதி உள்ளதென்றால் சரிதான், ஆனால் சம்பவம் அங்கு நடக்கவில்லை. அந்த மகளிர் விடுதிக்கு பின்னால் தான் எனது வீடு என்றால் சரிதான். எனது தங்கை புஷ்பராணியின் வீடு காளியம்மன் கோவிலுக்கு வடக்கு பக்கம் பின்னால் உள்ளதென்றால் சரிதான். எனது வீட்டில் இருந்து எனது தங்கையின் வீட்டிற்கு செல்வதற்கு காளியம்மன்கோவில் வழியாக வந்து தான்செல்லவேண்டும் என்றால் சரிதான். எனக்கு புஷ்பராணி என்ற தங்கையும், பாக்கியம் என்ற அக்காவும் உள்ளார்கள் என்றால் சரிதான். எனது அக்கா பாக்கியம் என்பவரின் மகள் பெயர் பிரபா என்றால் சரிதான். பிரபாவின் தங்கையை ரவி என்பவர் திருமணம் செய்துள்ளார். புஷ்பராணி வீட்டின் அருகே எதிரிகளின் பெரியம்மா மகள் ஜான்சி என்பவர் குடியிருந்துவந்தார் என்றால், அவர்கள் கொஞ்சம் தள்ளி இருக்கிறார்கள். 1 முதல் 5 எதிரிகள் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். 6ம் எதிரி மற்ற எதிரிகளின் தாய்மாமா மகன் என்றால் சரிதான். ஜான்சி என்பவருக்கு அம்மா, அப்பா கிடையாதென்றால் அப்பா இருக்கிறார், வெளியூரில் இருக்கிறார், அம்மா கிடையாது. அவரது அப்பாவிற்கும், ஜான்சிக்கும் எந்த தொடர்பும் கிடையாதென்றால் சரிதான். அந்த ஜான்சியும், எதிரிகளும் ஒன்றாகத்தான் இருப்பார்கள் என்றால் சரிதான். எனது அக்கா மருமகன் ரவி என்பவர் மேற்படி ஜான்சியை அடித்ததாக ஒரு வழக்கு மகளிர் நீதிமன்றத்தில் உள்ளதென்றால் சரிதான். புகார் மனு நான் சொல்லி எழுதியது என்றால் சரிதான். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனக்கு படிக்க தெரியாது. புகார் மனுவில் நேற்று 24.05.2020 ம் தேதி சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் சரிதான். ஜான்சி மீதான

வழக்கை வாபஸ் வாங்க பேசினோமா என்றால் ஜான்சி என்னிடம் பேசினார். நான் அவரிடம் அது உங்களுக்குள்ள பிரச்சனை என்று சொல்லிவிட்டேன். சம்பவத்தின்போது எனது தங்கை மகன் வனராஜா என்னை விலக்கிவிட்டாரா என்றால் விலக்கிவிட்டார். வனராஜும், எதிரிகளும் ஒன்றாக சேர்ந்துதான் கொத்தனார் வேலைக்கு செல்வார்கள் என்றால் எனக்கு தெரியாது. வனராஜை விசாரித்தால் சண்டை நடந்ததா இல்லையா என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். எதிரிகள் யாரும் என்னை அடிக்கவில்லை என்றாலும், ரவி மீது போடப்பட்ட வழக்கை வாபஸ் பெற வேண்டும் என்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் கிடையாதென்றால் சரியல்ல.